இத்துறையின் உலக அளவிலான போட்டித் திறனை அதிகரிக்கும் வகையில் துறை சார்ந்த பன்னாட்டு அளவிலான ஆய்வு மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தற்போதைய போட்டித் திறனை மதிப்பிட்டு உலக அளவில் செயல்பட்டுவரும் இத்தகைய தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனுடன் ஒப்பிட்டு சிறந்த நிலை அடைய இந்த ஆய்வு பயன்படும்.

முற்பகல் 11–10

2. 1958 ஆம் ஆண்டில், கிண்டி தொழிற்பேட்டை முதன்முதலாக தமிழக அரசால், சென்னை நகரின் மையப் பகுதியில் உருவாக்கப்பட்டது. இத்தொழிற்பேட்டையில் கிடைமட்ட விரிவாக்கத்திற்கான நிலம் பற்றாக்குறையாக இருப்பதால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்கும், மேலும் கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கெனவே இயங்கிவரும் நிறுவனங்களின் விடுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அடுக்குமாடி தொழில் வளாகம் ஏற்படுத்தித் தருவது அவசியமாகிறது. எனவே, கிண்டி தொழிற்பேட்டையில் ஓர் அடுக்குமாடி தொழில் வளாகம், சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

5. புதிய வருவாய் வட்டங்கள், கோட்டங்கள் உருவாக்குதல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான புதிய தொழில் கொள்கை மற்றும் மேம்பாடு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாடு சுதந்திரம் அடைந்து மத்தியிலே ஆட்சி அமைந்தபோது, பிரதமர் நேரு அவர்கள் ஆட்சியின் தொடக்கத்திலே ஒன்றைச் சொன்னார். ‘நம் ஆட்சியின் பிரதான இலட்சியமாய், நீண்ட இலட்சியமாய் நாம் ஒன்றைக் கருத்திலே கொள்ளவேண்டும். பெரும் மக்கள் தொகையை உள்ளடக்கிய ஜனநாயக நாட்டிலே, கடைசி மனிதனுக்கு, கடைசி எளிய குடிமகனுக்கு, இந்த ஆட்சியின், அதிகாரத்தின் நெருக்கத்தை உருவாக்குவதுதான், ஜனநாயகத்தின் வெற்றியாக இருக்கமுடியும்‘ என்று சொன்னார்.

2015 ஆகஸ்ட் 31] [முனைவர் செ.கு. தமிழரசன்]

கடந்த நான்காண்டுக் கால ஆட்சியிலே மட்டும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏற்கெனவே 49 வட்டங்களை உருவாக்கியதோடு இப்போது புதிதாக 16 வட்டங்களை உருவாக்கி, ஜனநாயகத்திற்கு எது இலக்கணமோ, எது நோக்கமோ, எது இலட்சியமோ, அதை நிறைவேற்றுகிற வகையிலே, கடைசி மனிதனுக்கு, எளிய குடிமகனுக்கு, ஆட்சியின் நெருக்கத்தைக் கொண்டுபோய் நிறுத்துகிற வகையில் இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 5 புதிய வருவாய்க் கோட்டங்களை உருவாக்கி, 16 புதிய வட்டங்களை உருவாக்கி, இன்றைக்கு 285 வட்டங்கள் இருக்கின்ற தமிழகத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த நான்காண்டுக் கால ஆட்சியிலே மட்டும், 50 வட்டங்களுக்கு மேலே புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருவாய்த் துறையிலே ஒரு புதிய மறுமலர்ச்சியைக் கொண்டுவரும் வகையில், ஏற்கெனவே இதே அவையிலே விதி 110–ன்கீழ், 'அம்மா திட்டம்' குறித்து அறிவிப்பு வெளியிட்டு, ஆங்காங்குள்ள மாவட்ட அலுவலர்கள், வட்ட அலுவலர்கள், ஒவ்வொரு கிராமத்திலுள்ள மக்களையும் தேடிச் சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய குறைகளைத் தீர்த்து வைக்கின்ற வகையிலே, அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அந்தத் திட்டத்தின்மூலம், மக்களைத் தேடித் தேடி, 'உங்களுக்குப் பட்டா நிலுவையா? உங்களுக்குக் குடும்ப அட்டை நிலுவையா? எது நிலுவையாக இருக்கிறது? வருவாய்த் துறையிலே உங்களுக்கு என்ன பற்றாக்குறையாக உள்ளது?' என்பதை அறிந்து, அதைத் தீர்த்து வைக்கிற வகையிலே செயல்படுத்தப்பட்டுவரும் 'அம்மா' திட்டத்திற்கு, மணிமகுடம் சூட்டுகிற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் புதிதாக உருவாக்கப்படும் வருவாய்க் கோட்டங்கள் குறித்த அறிவிப்பும், புதிய வட்டங்கள் குறித்த அறிவிப்பும் அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், வருவாய்த் துறையின் பணிகளை எளிமையாக்குகிற, எளிய மனிதனிடம் அதிகாரத்தின் நெருக்கத்தைக் கொண்டு செல்கின்ற, இந்த அறிவிப்புகளை நான் மனமார வாழ்த்தி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இந்தியாவிலேயே பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தைவிட, தொழில் வளர்ச்சியிலே நீண்ட காலமாக முன்னணியிலே இருக்கின்ற மராட்டிய மாநிலத்தைவிட,

நம்முடைய தமிழகம் குறு தொழில்களிலும், சிறு தொழில்களிலும், மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்று, முதல் நிலையிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மேலும் ஒரு கிரீடம் வைக்கின்ற வகையிலே, இன்றைக்கு கிண்டி தொழிற்பேட்டையில், ஓர் அடுக்குமாடி தொழில் வளாகம், சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்று அறிவித்திருப்பதையும் நான் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்று, நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ‘அம்மா திட்டம்’ அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் இந்திய ஜனநாயக அரசியல், நிருவாக வரலாற்றில், அரசு இயந்திரங்களை, அரசு அலுவலகங்களை மக்கள் நாடிச் சென்றதை மாற்றி, உண்மையான மக்களாட்சியின் பண்பை, குடியரசின் பண்பை, ஜனநாயகத்தின் பண்பை, தமிழ்நாட்டு மக்கள் நுகர்கிற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, முதன்முதலாக அரசு நிருவாகம் மக்களைத் தேடிச் செல்கின்ற வகையில், நிருவாக நிலையை மாற்றிக் காட்டியவர் உத்தமத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியாக, இன்றைக்கு 16 புதிய வட்டங்கள், 5 புதிய வருவாய்க் கோட்டங்களை உருவாக்கி, மக்களுக்கு இன்னும் நெருக்கமாக அரசினுடைய நிருவாகத்தைக் கொண்டு சென்றிருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஏற்கெனவே, சிறு, குறு, நடுத்தரத் தொழில்களிலே ஆசியாவினுடைய தலைநகரமாகச் சென்னை இருக்கிறது; தமிழ்நாடு இருக்கிறது. அந்த வகையில், ஆசியாவிற்கு மட்டுமல்ல; உலகத்திற்கே வழிகாட்டுகிற அரசாக, அன்னைத் தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தமிழ்நாடு அரசு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்ற வகையிலே, இன்றைக்கு விதி 110–ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருவாய்த் துறையிலும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைகளிலும் திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். இந்த மகத்தான

2015 ஆகஸ்ட் 31] [திரு. உ. தனியரசு]

திட்டங்களை, தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக 7 கோடிக்கும் மேற்பட்டிருக்கிற மக்களும், விரும்பி, மனதாரப் பாராட்டி, வரவேற்பதைப்போல், நானும், பாராட்டி, வரவேற்று, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் இன்றையதினம் தமிழகத்தில் 16 புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை அறிவித்திருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேபோன்று, 5 புதிய வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களையும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதாவது, சாதாரண மக்கள் தங்களுக்குத் தேவையான பட்டா, சிட்டா போன்றவற்றை, அலைந்து, திரியாமல் பெறவேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு, கடைசி குடிமகனுக்கும் திட்டங்கள் சென்று சேர வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறையில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், மதுரை மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால், கோட்டாட்சியர் உட்பட அனைத்து அலுவலர்களும் எல்லா அலுவல்களுக்கும் மதுரைப் பகுதிக்கு வரவேண்டியுள்ள நிலையை மாற்றி, மேலூரில் ஒரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் உட்பட 5 கோட்டாட்சியர் அலுவலகங்களை அளித்திருப்பதற்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழ்நாட்டில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் கிட்டத்தட்ட 60 இலட்சம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக இருப்பதை நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மேலும் முன்னேற்ற வேண்டும் என்பதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்க, கிண்டி

தொழிற்பேட்டையில் அடுக்குமாடி தொழில் வளாகத்தை 100 கோடி ரூபாயில் அமைக்க ஒரு திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அனைத்துத் துறைகளிலும் முன்னேற வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் திட்டங்களை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனதாரப் பாராட்டி மகிழ்கிறது. நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Michael E. Porter, C.K. Prahalad போன்ற உன்னத நிருவாக இயல் குருக்கள் எடுத்து இயம்பிய competitive advantage, அதாவது போட்டித் திறன் என்ற தத்துவத்தின் வாயிலாக தமிழகத்தை ஆசியாவின் S.M.E. Capital ஆக, குறு, சிறு நிறுவனங்களின் தலைநகராக உருவாக்குவதற்கும், தமிழகத்தின் போட்டித் திறனை S.M.E. துறையில் உயர்த்தி, உலகத்தின் S.M.E. Capital ஆக தமிழகத்தை உருவாக்க மிகச் சிறந்த வழிவகுக்கக்கூடிய ஓர் உலகளாவிய ஆய்வை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் மதிப்பில் அடுக்குமாடி தொழில் வளாகம் அமைக்கும் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.

இன்று, தமிழகம் உலக அளவில் 7 துறைகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் உலகத்திலேயே சிறந்த போட்டித் திறன் பெற்றிருக்கிறது. Auto components, Leather, I.T.–மற்றும் I.T. Enabled Services–ன் உள் துறைகளான, Analytics, Animation, CAD மற்றும் CAM, Textiles ஆகிய துறைகளில் ஏற்கெனவே நாம் உலகத் தரத்தில், உலகத்திலேயே போட்டித் திறன் அதிகமுள்ள நிறுவனங்களை உருவாக்கியிருக்கிறோம். இதை மென்மேலும் வலுப்படுத்த, இன்று அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள், ஆய்வு, அந்த ஆய்வு சார்ந்த செயல்பாடுகள் கண்டிப்பாக உறுதுணையாக இருக்கும். இதை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில்

2015 ஆகஸ்ட் 31] [திரு. அ. அஸ்லம் பாஷா]

ஒன்றியிருக்கக்கூடிய வருவாய்த் துறைக்கு சிறப்பேற்றுகின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 16 புதிய வட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக, என்னுடைய வேலூர் மாவட்டத்திற்கு 2 வட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக, பேரணாம்பட்டு தொகுதியில், சென்ற சட்டமன்றத் தொகுதி சீரமைப்பின்போது சட்டமன்றத் தொகுதி என்ற அந்தஸ்தை இழந்த அந்த மக்களுக்கு இன்றைக்கு பேரணாம்பட்டு வட்டம் அறிவித்திருப்பது மிகப் பெரிய வரப்பிரசாதமாக, மிகப் பெரிய திருப்தியை அளித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110—ன்கீழ் இன்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறையில் உள்ள சில வட்டங்களை இரண்டாகப் பிரித்து அறிவித்துள்ளதை நான் வரவேற்கின்றேன். வருவாய்த் துறையில், ஏற்கெனவே 'அம்மா திட்டம்' செயல்பட்டு வருகிறது. அதிகாரிகளைத் தேடி மக்கள் போய்க் கொண்டிருந்த நிலையை மாற்றி, வாரத்தில் ஒரு நாள், வெள்ளிக்கிழமைக்கு முக்கியத்துவம் அளித்து, அன்று அதிகாரிகள் மக்களைத் தேடி வந்து, உங்களுக்கு என்ன வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) பட்டா மாறுதல் வேண்டுமா அல்லது ரேஷன் கார்டு வேண்டுமா எனக் கேட்டுத் தெரிந்து, உடனுக்குடன் மக்களுடைய கோரிக்கையினை ஏற்று, நிறைவேற்றி கொடுக்கக்கூடிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாகும்.*

சென்னை தலைநகரில் இது வரை வருவாய்க் கோட்டங்களே இல்லை என்ற நிலையில், எழும்பூர் மற்றும் தண்டையார்பேட்டையில் வருவாய்க் கோட்டங்கள் என இரண்டு புதிய கோட்டங்களை உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய மக்கள் விரைவாக அரசின் நல உதவிகளைப் பெறுவதற்கு வருவாய்த் துறை மிக முக்கியமான துறையாக இருக்கின்றது. இருக்கின்ற பல்வேறு வருவாய் வட்டங்களைப் பிரித்து இன்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். அதிலும், குறிப்பாக கரடிகுப்பம், வேதப்பட்டு போன்ற இடங்களிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் பயணம் செய்து செஞ்சி வந்துதான் மக்கள் நலத் திட்டங்களைப் பெற வேண்டிய சூழ்நிலை இருந்தது. அந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, செஞ்சி வட்டத்தைப் பிரித்து மேல்மலையனூரில் ஒரு புதிய வட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலவர் அவர்களுக்கு, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிய வட்டங்களை அறிவித்துள்ளார்கள். புதிதாக உருவாக்கப்பட்ட தாலுகா அலுவலகங்களின் எனது தொகுதியான ஓசூரில் உள்ள சூளகிரியை தாலுகா அலுவலகமாகப் பிரித்து இன்று அறிவித்ததற்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சூளகிரியைப் பிரித்த பிறகு, எனது தொகுதியான ஓசூரைச் சேர்ந்த ஆறு பஞ்சாயத்துகள் சூளகிரியில் இருக்கின்றன. அந்த ஆறு பஞ்சாயத்துகளை ஓசூரில் சேர்க்க வேண்டுமென்று கேட்டு, இந்த அறிவிப்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

***திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள தாலுகாகளில், குடியாத்தம் தாலுகாவிலிருந்து பிரித்து, பேரணாம்பட்டு என்ற புதிய தாலுகாவை அறிவித்துள்ளது அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் ஆறுதலை அளிக்கக்கூடிய ஒரு விஷயமாகும். ஏனென்றால், பேரணாம்பட்டு என்பது ஒரு தனித் தொகுதியாக இருந்தது. அதை

முழுவதுமாகக் கொண்டு வந்து குடியாத்தத்தில் சேர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் வருத்தத்துடன் பல போராட்டங்களை நடத்தினார்கள். ஆதங்கத்தோடு தாலுகா பிரிப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பூர்த்தி செய்யும் வகையில், இப்போது புதிய தாலுகாவாக பேரணாம்பட்டை அறிவித்திருப்பதற்கு அந்த மக்களின் சார்பாக மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரணாம்பட்டு என்பது தொழிற்சாலை நிறைந்த பகுதியாகும். தோல் மற்றும் தோல் சம்பந்தமான பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்ற பகுதியில் வருவாய்த் துறை மூலமாகத் தாலுகா அமைத்திருப்பது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் ஆறுதல் தரும் என்பதைக் கூறி மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11—25

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் துறந்து, தமிழினம் காக்கும் மனித வடிவில் புனித தெய்வம் அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) ஈகைத் தாயின், ஈடில்லா அரசு, வாகைகள் சூடி, வரலாறு படைக்குது! திட்டங்களே திகைத்துப் போகும் திட்டங்கள் தரும் தாயே! தருமத்தின் பெயர் நீங்களேதான் அம்மா! அண்டை மாநிலம் தொடங்கி, அயல் நாடு வரை வியக்கும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் இன்று மாற்றமும், ஏற்றமும் பெறும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உலகளாவிய போட்டித் திறனை மேம்படுத்துவதற்காக தொழிற்பிரிவுவாரியாக பன்னாட்டு அளவிலான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தமைக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மேம்பாட்டிற்காக சேவை தொழில் நிறுவனங்களுக்காக ரூபாய் 100 கோடி மதிப்பில் அடுக்குமாடி தொழில் வளாகம், கிண்டியில் ஏற்படுத்திட ஆணையிட்டு மறுமலர்ச்சித் திட்டங்களை வாரி வழங்கியுள்ள மனிதநேய வள்ளலே! தங்களுக்கு என் சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற துறையின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கெனவே தங்களுடைய ஆட்சியிலேதான் 3 வட்டங்களைப் பிரித்துத் தந்தீர்கள். போதாது, போதாது என்று மேலும் வருவாய்த் துறையைச் சிறப்போடு அமைத்திட திருக்கோவிலூரைப் பிரித்து கண்டாச்சிபுரம், செஞ்சியைப் பிரித்து மேல்மலையனூர் என்கிற 2 வட்டங்களையும் ஆக, விழுப்புரம் மாவட்டத்திற்கு 5 புதிய வட்டங்களைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளை மாவட்டத்தின் சார்பாகத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல் தமிழினத்தைக் காத்து நிற்கின்ற தமிழர் குல சாமி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். நாட்டு மக்களின் இன்றையத் தேவைகளுக்கான பணிகளை இன்றே செய்து முடிப்பவர்கள் சாதாரண தலைவர்கள் ஆவார்கள். ஆனால், மக்களின் இன்றையத் தேவைகளோடு மட்டுமல்லாமல், அவர்களின் வருங்காலத் தேவைகளையும் இன்றே நிறைவேற்றித் தருகின்ற பணிகளை, இன்றே செய்து முடிப்பவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைத் தலைவர்கள், இன்றே செய்து முடிப்பவர்கள்தான் சாதனைத் தலைவர்கள் ஆவார்கள். அந்த இலக்கணத்திற்கு உயிர் கொடுக்கின்ற வகையிலே மக்களின் இன்றையத் தேவைகளையெல்லாம் முழுமையாக வெற்றிகரமாகச் செய்து தந்ததோடு மட்டுமல்லாமல், தமிழினத்தின் வருங்காலம் வளமான காலமாக அமைய வேண்டும் என்பதற்காகவும், எதிர்கால எதிர்பார்ப்புகளையெல்லாம் எவரும் எதிர்பார்த்திடாத வகையிலே, இன்றைக்கே செய்து தந்து கொண்டிருக்கின்ற ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். வருவாய்த் துறையிலே அரசின் நலத் திட்டப் பணிகள் அனைத்தும் மக்களுக்கு எளிதில் சென்றடையும்வகையிலும், பொதுமக்கள் தங்களுக்குரிய வட்டத் தலைமையிடத்தினை எளிதிலே சென்றடையும்வகையிலும், இதுவரை வருவாய்த் துறை காணாதவகையிலே 49 புதிய வட்டங்களையும், 4 புதிய கோட்டங்களையும் உருவாக்கித் தந்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு இந்தப் புனித தினத்திலே

2015 ஆகஸ்ட் 31] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

16 புதிய வட்டங்களையும், 5 கோட்டங்களையும் உருவாக்கித் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலம்காலமாக, அரசைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி மக்களைத் தேடி அரசு என்ற நிருவாகப் புரட்சியை நிகழ்த்திக் காட்டியிருக்கின்ற ஒரே அரசியல் ஞானி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் “கனவு காணுங்கள்” என்று சொன்னார்கள். ஆம். இந்தச் சட்டமன்றப் பேரவையிலே எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதியிலே ஒரு புதிய வட்டம், ஒரு புதிய கோட்டம் கிடைக்குமா என்று கனவு கண்டார்கள். ஆனால், கடந்த காலத்திலே குதிரைக்கு கொம்பு முளைத்தாலும் முளைக்குமேயொழிய, புதிய வட்டங்கள் கிடைக்காது. ஆனால், இன்றைக்கு கண்ட கனவுகள் எல்லாம் நனவாகின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறை வரலாற்றிலே இல்லாத வகையில் 65 புதிய வட்டங்களை, 9 கோட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிற இந்தியத் திருநாட்டினுடைய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கருத்துக் கணிப்புகள் வந்து கொண்டேயிருக்கின்றன. இனி ஆண்டாண்டு காலத்திற்கும் அன்னைத் தமிழகத்தை ஆளுகிற தகுதி மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்குத்தான் இருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வருவாய்த் துறையின் சார்பிலும், இந்த நாட்டு மக்களின் சார்பிலும் தொட்டு வணங்கி அமைகின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி தருகிறேன், உட்காருங்கள். வருவாய்த் துறை குறித்த அறிவிப்புகள் என்றதும் எனக்கு ஒரு செய்தி, நேற்றைக்கு ஒரு செய்தி படித்தேன். 10 ஆம் வகுப்புத் தேர்வில் ஆதி திராவிடருக்கான ஒதுக்கீட்டில் மாநில அளவில் முதலிடம் பிடித்தவர் கூலித் தொழிலாளியின் மகன் சரவணன். பள்ளிப் படிப்பினைத் தொடர இயலாத அளவிற்கு வறுமை வாட்டினாலும், படித்துச் சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம், கனவு அவருக்கு இருந்தது. பயன்படுத்திய தனது பாட நோட்டிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தைக் கிழித்து,

மேல் படிப்புக்கு உதவி செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். துண்டுக் காகிதத்திற்கு மதிப்பளித்து, அவரது வேண்டுகோளை ஏற்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அவரது பள்ளிப் படிப்பு முதல் பொறியியல் படிப்பு வரை கல்வி உதவித் தொகை வழங்கி, அவரது வாழ்வில் ஒளியேற்றியதால், தற்போது திரு. சரவணன் அவர்கள் இந்திய வருவாய்த் துறைப் பணிக்குத் தேர்வாகி, உத்திரகாண்ட் மாநிலத்திலே பயிற்சி மேற்கொண்டு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற செய்தி என்னை நெகிழச் செய்தது. துண்டுக் காகிதத்தில் கோரிக்கை வைத்தால்கூட நிறைவேற்றும் நீதி தேவதை மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்கள், ஏழை, எளியோர் பயன்பெற 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வருவாய்த் துறைக்கு புதிய வட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள் வருவது குறித்து முதலமைச்சரின் அறிவிப்புகள். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழில் கொள்கை, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி தொழில் வளாகம் குறித்த அறிவிப்புகள். மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சிய அறிவிப்புகளினால், திட்டங்களினால் வெற்றிகள் குவியட்டும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் வருவாய்த் துறை குறித்த ஏற்றமிகு அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி என்ன? சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக 24 கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், ஒத்திவைப்புத் தீர்மானங்களும் கொடுத்துள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடு) அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளுக்குப் பதில் வர, வர ஒவ்வொன்றாக நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இப்போதுதான் காலையில்